# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 07-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர் | - | திரு.ராமசந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | உலகநாதன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை காவல் நிலையம் | வயது | - | 42/2026 |
| சாதி | - | | | | |

**17.03.2026**

**( எதிரி ஆஜர்)**

(அரசு தரப்பில் 348 BNSS பிரிவு-ன் கீழான மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டு சாட்சி கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வால்பாறை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதாலும், நீதிமன்ற நேரத்தை கருத்திற்கொண்டு, நீதியின் நலன் கருதியும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி உடல்நலக்குறைவால் பணியிட மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணியாற்றி வருவதாலும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் திரு.ஆனந்தகுமார் பணியிட மாறுதல் காரணமாக வேறு மாவட்டத்தில் பணியாற்றி வருவதாலும், அவர்களுக்கு பதிலாக நான் சாட்சியமளிப்பதற்கு பிரிவு 348 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்து நீதிமன்ற அனுமதியுடன், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 19.11.2024-ம் தேதி 20.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி வால்பாறை காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, நல்லமுடி எஸ்டேட்டை சேர்ந்த மணிவேல் என்பவரின் மனைவி முருகம்மாள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று, நிலைய குற்ற எண்.136/2024, சட்டப்பிரிவு 318(4) BNS-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.07-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களின் பார்வைக்கு வைத்தார். ஆய்வாளர் திரு.ஆனந்தகுமார் வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே 21.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேஸ்குமார், முனியாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.8-ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சாட்சிகள் முருகம்மாள், விக்னேஷ், முனியாண்டி, ராஜேஸ்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், தனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என்று தெரியவரவே எதிரியை தேடி சென்ற நிலையில் 20.11.2024-ம் தேதி காலை 11.30 மணிக்கு வால்பாறை டவுண் SBI ATM அருகிலும், Union Bank ATM அருகிலும், நடுமலை ரோட்டில் உள்ள Indian Bank ATM அருகிலும் கண்காணித்த போது, சந்தேகப்படும் படி முகத்தில் முககவசம் மற்றும் தலையில் கருப்பு நிற தொப்பி அணிந்திருந்த ஒரு நபர் போலீஸ் பார்டியை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அவரை சாட்சிகள் ரவிக்குமார் மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து, விசாரித்த போது, எதிரி தனது பெயர் நஜீப் (வயது 36), த/பெ.குஞ்சுமக்கார் என்று கூறியவர் தாமாக முன் வந்து எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் 3-ம் பக்கத்தில் கீழிலிருந்து மேலாக 6 வரிகள் அனுமதிக்கப்பட்ட பகுதியாகும். (**அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் 12.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த 1) ATM கார்டுகள் 43, 2) RBK என்று எழுதப்பட்ட நீல நிற தொப்பி 1, 3) Nike என்று எழுதப்பட்ட சாம்பல் நிற தொப்பி 1, 4) Puma என்று எழுதப்பட்ட கருப்பு நிற தொப்பி 1, 5) Ferrari என்று எழுதப்பட்ட சிவப்பு நிற துணி மாஸ்க் ஒன்று, 6) கருப்பு நிற மெடிக்கல் மாஸ்க் ஒன்று, 7) நீல நிற மெடிக்கல் மாஸ்க் - 2, 8) பணம் ரூ.5,290/- ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றியுள்ளார். (**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.11-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) பின்னர் எதிரியை நிலையம்

அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து, பாரா வசம் ஒப்புவித்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். தடய பொருட்களை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். ( **6522940124093983 என்ற எண் கொண்ட ஜெயசந்திரன் என்ற பெயர் எழுதப்பட்ட SBI ATM Card-க்கான படிவம் 91 அ.சா.ஆ.12-ஆகவும், 43 ATM கார்டுகள், 3 தொப்பிகள், 4 மாஸ்க்கள், பணம் ரூ.5,290/- ஆகியவற்றுக்கான படிவம்-91 அ.சா.ஆ.13-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) அவற்றின் PR.No.14/2025- ஆகும். ( **43 ATM கார்டுகள் அ.சா.பொ.1-ஆகவும், 3 தொப்பிகள் அ.சா.பொ.2-ஆகவும், 4 மாஸ்க்கள் அ.சா.பொ.3-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. ரூ.5,290/-க்கான புகைப்படம் அ.சா.ஆ.14-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சாட்சிகள் ரவிக்குமார் மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி-ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் தனது புலன்விசாரணையை முடித்து 24.03.2025-ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 318(4) BNS-ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது நீதிமன்றத்தில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். இருந்த போது, எதிரி தண்டிக்கப்பட வேண்டியவர் ஆவார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொன்னவாறு, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

,